ஆண்டு பட்டிகை வழக்கு எண்.47/2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 47/2026 | LW- 1 | | PW- 1 |
| Name | : மெய்யன் ( புகார்தாரர்) | | |
| Father's/Husband's Name | : பழனி | | |
| Village | : கோவில்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 41/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். சுமார் 10 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் ஆட்டோவில் லைசென்ஸ் இல்லை என்பதற்காக போலீசார் என்னிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை பற்றி விசாரித்தார்கள். **(புகார் மனுவில் உள்ள கையொப்பம் அ.த.சா.ஆ.1ஆக குறீயீடு செய்யப்படுகிறது.)**

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 21.10.2015ம் தேதி காலை 6.00 மணிக்கு நானும், அழகர்சாமி என்பவரும் கோவிலுக்கு பலி கொடுக்க ஆட்டு கிடாய் வாங்குவதற்காக நத்தம் – குட்டுப்பட்டி பெரிய மலையூர் சென்றோம் என்றால் சரியல்ல. ஆடு சரியாக அமையாததால் அய்யனார் அருவி அருகே காலை 8.00 மணியளவில் திரும்பி வந்தபோது பின்னால் பெயர், விலாசம் கேட்டு தெரிந்த பெரியமலையூர் பழனி மகன் பாக்கியராஜ், பச்சையன் மகன் தங்கையா, ஆண்டி மகன் பழனிச்சாமி, பாகன் மகன் பால்ச்சாமி, பொன்னழகு மகன் சுந்தர்ராஜ் மற்றும் செல்வம், பொன்னர், நாகராஜ் ஆகியோர் அரிவாள், கத்தி, கம்பி, கயிறு போன்ற பயங்கர ஆயுதங்களுடன் வந்து என் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியும், கழுத்தில் கயிறை போட்டு நெறித்தும் கொன்றுவிடுவோம் என்றும், பெரிய அரிவாளை வைத்து மிரட்டி எனது டவுசர் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.10,000/–த்தை பிடுங்கிவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் உடனே உயிருக்கு பயந்து நடந்தே அங்கிருந்து மணக்காட்டுர் வந்து பின்னர் நடந்த விபரத்திற்கு நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதாலும் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.13 17:47:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.47/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

| | | | |
|---|---|---|---|
| CC.No. 47/2026 | LW- 3 | | PW- 2 |
| Name | : தென்னரசு (பார்வை மகஜர் சாட்சி) | | |
| Father's/Husband's Name | : வெள்ளைக்கண்ணு | | |
| Village | : லெட்சுமணபுரம், குட்டுப்பட்டி | | |
| Taluk | : நத்தம் | | |
| District | : திண்டுக்கல் | | |
| Age | : 61/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of March 2026

( 1 முதல் 5 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதில்லை. போலீசாரிடம் நான் இதற்கு முன்பாக கையொப்பம் எதுவும் செய்யவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அனுமதி கோரப்பட்டு அனுமதி அளித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

2. போலீஸ் விசாரணையில் கடந்த 21.10.2015ம் தேதி காலை 11.00 மணிக்கு நானும், சேவுகன் என்பவரும் சம்பவ இடத்தில் இருந்தபோது நத்தம் காவல் நிலைய ஆய்வாளர் அங்கு வந்து எங்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சியாக

கையொப்பம் கேட்டதன் பேரில் நானும், சேவுகன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J Aafreen Begum M.com., L.LM.,

Digitally signed by J Aafreen Begum M.com., L.LM.,
Date: 2026.03.13 17:47:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்